நல்லூர், யாழ்ப்பாணம்
முதலாந் தவணைப் பரீட்சை - 2014

தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் - 3 மணி

**1 - 30 வரையான வினாக்களுக்குள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) மாட்டின் பிணிக்கு மருந்தா யொரு சூடு..... இங்கு பிணி என்பதன் ஒத்த பொருள் தரும் சொல்
   1) வலி 2) துன்பம்
   3) நோய் 4) கட்டு

2) வேழத்தில் பட்டுருவுங் கோல் பஞ்சில் பாயாது....... இதில் வேழம் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல்
   1) யானை 2) சிங்கம்
   3) கரடி 4) புலி

3) வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்று உபசாரம் செய்தல் நல்ல பழக்கமாகும் - உபசாரம் என்பதன் எதிர்ப் பொருட் சொல்
   1) அவமானம் 2) அபசாரம்
   3) அபகாரம் 4) விவகாரம்

4) முல்லைக்கு நேர் ஈந்தான் வள்ளல் பாரி- வள்ளல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1) ஊதாரி 2) கொடையாளி
   3) ஆண்டி 4) உலோபி

5) மல்ரி மீடியா (Multi media) என்பதன் தமிழ்ச் சொல்
   1) ஊடகம் 2) கருவி
   3) பல்லூடகம் 4) கீபோட்

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6) எவருடைய புத்திமதியையும் கேட்காது தமது விருப்பப்படியே நடத்தலை விளக்கப் பொருத்தமான உவமைத் தொடர்
   1) கட்டுக்கடங்காத காளை போல
   2) விளக்கில் மொய்தத விட்டில் போல
   3) வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல
   4) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல

7) 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்ற பழமொழியின் கருத்து
   1) செல்வரும் வறியவர் ஆவார்
   2) ஆண்டியும் அரசனாவான்
   3) வல்லமை மிக்காரும் தவறுவர்
   4) எல்லா மிருகங்களுக்கும் அடி வழுக்கும்

8) நாம் நினைத்தபடி கருமங்கள் நடைபெறுவதில்லை என்பதை விளக்கும் பழமொழி
1) அவனின்றி எதுவும் அசையாது
2) திக்கற்றவனுக்கு தெய்வமே துணை'
3) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
4) உப்பிட்டவரை உள்ளளவும் நினை

9) தவிடு பொடியாதல் என்ற மரபுத் தொடரின் பொருள்
1) விரைந்தோடிப் போதல்
2) முழுவதும் நிலை குலைதல்
3) வீணாகிப் போதல்
4) தன்வயப்படுதல்

10) பற்களின் கூட்டம் வரிசை என்பது போல வைக்கோலின் கூட்டம்
1) கற்றை
2) கட்டு
3) குவியல்
4) சிப்பம்

11) மயில் அகவும் என்பது போல தேனீ
1) சொல்லும்
2) ரீங்காரம்செய்யும்
3) இரையும்
4) அலறும்

12) ஏழை எளியவர்களுக்கு உதவுவது நல்ல பழக்கமாகும். இதில் ஏழை எளியவர் என்பது
1) இணைமொழி
2) அடுக்குமொழி
3) இரட்டைமொழி
4) அடுக்கிடுக்கு மொழி

13) பொழில், தண்டலை, கா என்பன குறிப்பது
1) குளம்
2) வண்டு
3) சோலை
4) காடு

14) அறிஞர் பலர் கூடி ஒரு பொருள் பற்றி வாதிடும் களம்
1) அரங்கேற்றம்
2) ஒத்திகை
3) பட்டிமன்றம்
4) சொற்போர்

**புள்ளிக் கோட்டிட்ட இடத்துக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

15) பரீட்சையில் சித்தி அடைந்த மாணவன்................................................ அடைந்தான்
1) தடுமாற்றம்
2) புளகாங்கிதம்
3) மருட்சி
4) அங்கலாய்ப்பு

16) பொருள்களை ஏற்றமதி செய்வதால் நமது நாட்டிற்கு அந்நிய.........................கிடைக்கின்றது.
1) மூலதனம்
2) செலாவணி
3) சென்மதி நிலுவை
4) நன்கொடை

17) சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படும் என அரசியல் யாப்பில்............. அளிக்கப்பட்டுள்ளது.
1) உத்தேசம்
2) உத்தரவாதம்
3) பிரசித்தம்
4) நிபந்தனை

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க

18) வேற்றுமை உருவு ஏற்காத சொல்
1) யாம்
2) கனி
3) நடந்தவன்
4) இனி

19) அறம், பொருள், இன்பம் என்பது
1) உவமைத்தொகை
2) பண்புத் தொகை
3) உம்மைத்தொகை
4) வேற்றுமைத் தொகை

20) பின்வருவனவற்றுள் உடனிலை மெய் மயக்கம் அல்லாதது
1) அப்பம்
2) சங்கு
3) பட்டம்
4) சத்தம்

21) வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு ஓர் உதாரணம்
1) கொக்கு
2) வண்டு
3) சால்பு
4) நாகு

22) பெயராகவும் வினையாகவும் அமையும் ஒரு சொல்
1) உண்
2) கல்
3) அழகு
4) அறிவு

Education கல்வி අධ්‍යාපන

23) "மன்னன் கோன் முறை அரசு செய்க" இங்கு செய்க என்பது
1) வினையெச்சம்
2) பெயரெச்சம்
3) வினையாலணையும் பெயர்
4) வியங்கோள் வினை முற்று

24) இக்கவிதை பாரதியாரால் பாடப்பட்டது என்ற வாக்கியத்தில் பாடப்பட்டது என்பது
1) பிறவினை
2) செயப்பாட்டு வினை
3) எதிர்மறை வினை
4) செய்வினை

25) பன்மை விகுதி பெற்று வழங்கக் கூடிய சொல்
1) தண்ணீர்
2) நட்பு
3) மகிழ்ச்சி
4) சந்தர்ப்பம்

முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க

26) சீதையை விடுதலை செய்யாவிட்டால் நீயும் உன் படைகளும்
1) அழிவாய்
2) அழியும்
3) அழிவீர்கள்
4) அழிவோம்


kalvi.lk

27) நாரைக் கூட்டம் வயல் வரம்பில் நேற்று

1) இருந்தன
2) இருக்கும்
3) இருந்தது
4) இருந்தார்கள்

பின்வரும் பாடலைப் படித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீது இவள் கொண்ட பயம் ஒன்று காணும்

28) இப்பாடலில் இவள் எனக் குறிப்பிடப்படுபவள்

1) இலக்குமி
2) பூமாதேவி
3) கடல் அன்னை
4) மீனவனின் இல்லாள்

29) இப்பாடலில் குறிப்பிடப்படும் தொழில்

1) முத்துக் குளித்தல்
2) உப்புத் தொழில்
3) மரவேலை
4) மீன்பிடி

30) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தி ஒன்று அமையும் அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையத் தெரிவு செய்க.

அ) அவனுக்கு பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கிறது.

ஆ) பஞ்ச பூதங்களும் அவன் வசப்பட்டு அவனுக்கு ஊழியஞ்செய்து கொண்டு நிற்கின்றன.

இ) உயிரினங்களுள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகிறான்.

ஈ) மனிதன் தன் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றான்.

உ) மிகச் சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்று விட்டது.

1) ஆ, இ, அ, உ, ஈ
2) இ, அ, ஈ, ஆ, உ
3) ஈ, ஆ, இ, அ, உ
4) உ, ஆ, இ, அ, ஈ

(30x1 = 30 புள்ளிகள்)

kalvi.lk

பகுதி II

**வகுப்பறையில் நீர் மேற்கொண்ட கட்டுரையாக்கம் பற்றிய கணிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**I)**

1) இக் கணிப்பீட்டிற்றாக உமக்கு வழங்கப்பட்ட தலைப்பு யாது?

2) நீர் எழுதிய கட்டுரையின் மூலம் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் 2 தருக?

3) கட்டுரை ஒன்றின் அமைப்பில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் மூன்று தருக?

4) இக்கட்டுரைக்கான தகவல்களைப் பெற நீர் பயன்படுத்திய உசாத்துணை நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

**(3x4=12 புள்ளிகள்)**

**II) எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) உறவுமுறைக் கடிதத்தில் பின்வருவனவற்றுள் தவிர்க்கப்பட வேண்டியவை எவை?
முகவரி, உள்முகவரி, விளிப்பு, விடயத் தலைப்பு, செய்தி, முடிப்பு, ஒப்பம்

2) ஈன்றாளோ டெண்ணக் கடவுளுமில்
   1) இவ் அடிகள் மூலம் யாருடைய சிறப்பு கூறப்படுகிறது?
   2) அச்சிறப்பு எவ்வாறு காட்டப்படுகிறது?

3) பின்வருவன எந்தப் பிரதேசக் கிளை மொழிகள்
   1) மறுகா
   2) உறுலோசு

4) ‘சூடிய பூ’ , ‘பெய்யும் மழை’ இவ் இரு தொடர்களிலும் இடம்பெறும் பெயரெச்ச விகுதிகள் எவை?

5) சொல்லுக சொல்லில் பயன் உடைய சொல்லற்க, சொல்லில் பயன் இலாச் சொல் - மேற்படி குறட் பாவினை கொண்டு கூட்டி எழுதுக.

**(2x5= 10 புள்ளிகள்)**

**III) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1) நூலகத்தின் பயன்பாடு
2) இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்
3) தகவல் பரிமாற்றம் அன்றும் இன்றும்
4) இயற்கையுடன் ஒன்றி வாழ்வோம்

(15 புள்ளிகள்)

**IV) கீழே தரப்பட்ட உரைப் பகுதியின் சுருக்கத்தை 15 - 20 சொற்களில் எழுதுக.**

மனிதன் வெறும் மூளை அறிவு மட்டும் படைத்தவன் அல்லன். அவன் உள்ளமும் உடையவன் விஞ்ஞானம் மனிதனது சிந்தனை ஆற்றலை வளர்த்து, மூளையால் அறியும் அறிவை விருத்தி செய்கிறது. இந்த அறிவு மட்டும் இருந்தால் மனிதன் வெறும் இயந்திரம் போலாகி விடுவான். அவனை உள்ளம் உடையவன் ஆக்குவது; உணர்ச்சியுடையவனாக்குவது; அழகியல் நயப்புடையவனாக்குவது இலக்கியக் கல்வியே ஆகும். மூளையும் உள்ளமும் ஒரு சேர வளர்ச்சி அடையும் போதே மனிதன் ...

kalvi.lk

மனிதனாகின்றான். பண்பட்ட சமூக உறுப்பினன் ஆகின்றான். ஆதலால் இலக்கியக் கல்வியும் விஞ்ஞானக் கல்வியும் தம்முள் பிணங்காமல் இணங்கி நிற்றல் வேண்டும்.

(5 புள்ளிகள்)

V) உமது பாடசாலையில் நடைபெற்ற "டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்" தொடர்பாக அறிக்கை ஒன்றை மாணவ முதல்வர் என்ற வகையில் அதிபருக்கு எழுதி சமர்ப்பிக்குக (100 சொற்கள்)

(10 புள்ளிகள்)

VI) பின்வரும் செய்யுள், உரைப் பகுதியினது கருத்தை உமது மொழி நடையில் எழுதுக? தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை எழுதுக.

1) மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால் சொரியும் வெண்ணெயே- நாட்டில்
**அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும்**
உடையான் சடைப்ப னூர்.

2) அழியாச் செல்வமாகிய கல்வியை பெற்றுக் கொள்வதற்கு நாம் மிகவும் முயன்று வருவதோடு உயர்ந்த நூல்களைக் கற்று வரும்போது அந் நூல்களிற் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களையும் நாம் பழகி வருதல் வேண்டும் **"கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார் பொச்சாந்தும் தம்மைப் புகழ்ந்துரைப்பர்"**

($4\frac{1}{2}$x$4\frac{1}{2}$ = 9 புள்ளிகள்)

VII) எல்லாச் செல்வங்களையும் விட கல்வச் செல்வமே நிலையானது என்பதை மறைமலை அடிகள் 'கல்வியே அழியாச் செல்வம்' என்ற கட்டுரையில் வலியுறுத்தியிருக்குமாற்றை விளக்குக.

(9 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

*May*

### ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**